489—

வேதாரண்யம் கடலோர விளை நிலங்களில் கடல் நீர் உட்புகுதல்.

* 22622—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலோரப் பகுதியான வேதாரண்யம் தொகுதி விவசாயிகளின் விளை நிலங்களில் அடிக்கடி கடல்நீர் உட்புகுந்து பாதிக்கப்படுவதால் அதிகளவு இலவசமாக ஜிப்சம் வழங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

கடல்நீர் பாதிக்கப்படும் நிலங்களுக்கு ஜிப்சம் அளிப்பதனால் அந்த பாதிப்பினை நிவர்த்தி செய்ய இயலாது. கடல் நீர் உட்புகுவதால் மண்ணின் மேற்பரப்பில் உப்பு தங்கி விடுகிறது. இதனைக் களைய நல்ல நீரைப் பாய்ச்சினால் போதுமானது.

500—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, அண்ணாமலை நகரியத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்.

* 21130—திரு என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு ள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு டையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, அண்ணாமலை நகரியத்தில் குடிநீர்ப் பாற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆம் இப்பற்றாக்குறையைப் போக்க அண்ணாமலை நகர் நகரியத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் சிதம்பரம் நகராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்தும் பொருட்டு ரூ. 245.00 இலட்சங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்ட உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு.

கொடைக்கானல்-பழனி மலைப் பாதையில் வாகனங்களை மறித்துத் தாக்கி வழிப்பறி நடைபெற்றது குறித்து

திரு. ஜி. பழனிசாமி : முக்கியப் பிரச்சினை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் வரு கிறேன். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதை இப்போது எடுக்கப் போகிறேன். 2—5—1994 அதிகாலை பழனி அருகில் சவரிக்காடு என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு வழிப்பறிச் சம்ப வத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு ஒருவர் இறந்துள்ளார் மற்றும் வழிப்பறி பெரிய அளவில் நடைபெற்று இருக்கிறது என்கிற செய்தியை அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று, திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, என்னுடைய அனுமதியைக் கோரியுள்ளார், அதைப் போல மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, திரு. எஸ். டேனியல்ராஜ், திரு எ, தெய்வநாயகம், திருச்சி. ஞானசேகரன் ஆகியோர் இப்பிரச் சினையை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக அவையில் எடுத் துக் கொண்டு விவாதிக்க வேண்டுமென்று அறிவிப்பினைக் கொடுத்து இருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக, திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்கள், அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், முதலிலேயே என்னிடத்தில் அனுமதி கோரியுள்ள தால், இவர்களுடைய அறிவிப்பினையும் சிறப்புக் கவன ஈர்ப் பாக எடுத்துக் கொண்டு, அரசின் கவனத்திற்கு இப்பிரச்சி னையைக் கொண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2—5—1994 அன்று அதிகாலை கொடைக்கானலில் இருந்து பழனி நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு தனியார் வேனையும், பஸ் ஒன்றையும் மறைந்திருந்து, அடையாளம் தெரி யாத சிலர் சவரிக்காடு என்ற இடத்திற்கு அருகே தாக்கியுள்ள தால், அதிலே ஒருவர் இறந்தும், சிலர் காயமுற்றும், வழிப்பறி நடந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற் குக் கொண்டு வருகிறேன். இந்த நிகழ்ச்சி குறித்து மாண்பு மிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய